THIRU S. NARAYANASWAMY : Sir, is the Hon. Minister aware of the recent trouble created for this Corporation in the Government of India's decision to cancel some of the mortgage loans given to the sick mills as a result of which the Tamil Nadu Industrial Investment Corporation have lost about Rs. 1·55 crores of its Reserve Fund for no fault of its own or that of the State Government ?

மாண்புமிகு திரு செ. மாதவன்: தலைவரவர்களே, அதைப்பற்றி அண்மையிலே நானும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் அங்கே யுள்ள தொழிலமைச்சர் அவர்களைச் சந்தித்தோம். டி. என். டி. சி. எடுத்திருக்கக் கூடிய சிக் மில்ஸில் வரக்கூடிய கடன்களையெல்லாம் தரு வதாக ஒப்புக்கொண்டிருக்கின்றார்கள்.

Cutting of trees in Government Forests.

*120 *Q.* THIRU GEORGE KOMAGAN (on behalf of THIRU M. SANKARALINGAM) : Will the Hon. the Minister for Commercial Taxes be pleased to state—

(*a*) whether there is any rule that teak-wood, Etti, and Ayiani trees in Government Forests should be cut only after a prescribed period of years;

(*b*) if so, the details of the rules; and

(*c*) if not, whether there is any proposal to frame rules in this regard?

அரசு காடுகளில் மரங்களை வெட்டுதல்.

திரு ஜார்ஜ் கோமகன் (திரு எம். சங்கரலிங்கம் சார்பில்): மாண்பு மிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அரசு காடுகளில் வளரும் தேக்கு, ஈட்டி, ஆயினி போன்ற மரங்களைக் குறைந்த அளவு இத்தனை வருடங்கள் கழித்துத்தான் வெட்டலாமென விதியிருக்கிறதா ?

(இ) ஆமெனில், அவை யாவை ?

(உ) இல்லையெனில், விதிகளை உருவாக்கும் செயற்குறிப்பு உண்டா ?

மாண்புமிகு திரு ஓ. பி. இராமன்: (அ), (இ), அண்டு (உ) ஆம்.

தேக்குமரங்களை, குறைந்தது 20 ஆண்டு முதல், அதிக அளவு 80 ஆண்டுகளுக்குப்பின் வெட்ட வேண்டுமென்று அந்தந்த பிராந்திய திட்டப்படி வரை முறை செய்யப்பட்டுள்ளது. ஈட்டி, ஆயினி மரங்களுக்கு அம்மாதிரியான வரைமுறை இல்லை.

THIRU G. VASANTHA PAI : Sir, in view of the shortage of rainfall, will the Government take special steps not to cut down forests-whether it be teak or any other commodity?

மாண்புமிகு திரு ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, இந்த மூன்று ஜாதி மரங்கள் எத்தனை ஆண்டுகளுக்குப் பின்னர் வெட்டப்படுகின்றன என்பது குறித்து விடை. இந்த மரங்களை வெட்டி கொம்புகளாகப் பயன்படுத்துவதற்காக என்றால், 20 ஆண்டுக்காலம், தடி மரங்களாக வெட்டி பலகைகளாக அறுக்கும் அளவுக்கு 80 ஆண்டுக்காலம் என்று இருக்கின்றது. 80 ஆண்டுகளுக்குப் பிறகும் வெட்டி பயன்படுத்தா விட்டால், வீணாகிவிடும். முதிர்ந்த மரங்கள் வெட்டப்படுகின்றன என்கிறார்கள். காடு வளர்க்க வேண்டும் என்பது நல்ல யோசனைதான்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன. (குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.)

2. கவன ஈர்ப்பு.

(1) அரசு "ஏ" பிரிவு உயர்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் இரண்டாம் நிலைத் தமிழாசிரியர்களுக்கும், புதுக்கோட்டையில் "ஏ" பிரிவு உயர் நிலைப் பள்ளிகளில் முதல் நிலைத் தமிழாசிரியர்களுக்கும் பி. டி. ஆசிரியர் ஊதியம் தரப்படாதது குறித்து.

THIRU G. SWAMINATHAN: Sir, I wish to call the attention of the Hon. the Minister for Education to a matter of urgent public importance, namely, the non-payment of B.T. scale of pay to Second Grade Tamil Pandits who are working in 'A' Wing High Schools of the Government contrary to G.O. Ms. No. 63, dated 17th January 1974 and also in the case of some of the First Grade Tamil Pandits working in 'A' Wing High Schools in Pudukottai Town, lowering of their B.T. scale of pay to that of Secondary Grade contrary to the above mentioned G.O.and the fact of not allowing B.T. scale of pay to only those Tamil Pandits who are working in the 'A' Wing School while the same scale has already been paid to those in the 'B' Wing and Aided Secondary Schools in the State.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அரசு "அ" பிரிவு உயர்நிலைப் பள்ளிகளில் உள்ள முதல்நிலை தமிழாசிரியர் பதவிகளில் நியமனம் அல்லது பதவி உயர்வு பள்ளிக் கல்வி இணை இயக்குனரால் செய்யப்படுகிறது. அரசு "பி"பிரிவு பள்ளிகளில் அதே தரத்தில் உள்ள பதவிகளில் நியமனம் அல்லது பதவி உயர்வு முதன்மைக் கல்வி அலுவலர்களால் செய்யப்படுகிறது. "அ" பிரிவு பள்ளிகளைப் பொறுத் தவரையில் முதல்நிலைத் தமிழாசிரியர் எவரும் இரண்டாம் நிலைக்குத் தரம் தாழ்த்தப்படவில்லை. மாறாக புதுக்கோட்டை இராணி அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் அரசு ஆணை எண். 63, கல்வி, 1974-ம் ஆண்டு ஜனவரி மாதம் 17-ம் தேதியின்படி இரண்டு இரண்டாம்